**தலைப்பு 18 – பாராளுமன்ற பிரதம அரசாங்க கொறடாவின் அலுவலகம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

பாராளுமன்ற பிரதம அரசாங்க கொறடாவின் அலுவலகத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன்கூடிய 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் பாராளுமன்ற பிரதம அரசாங்க கொறடாவின் அலுவலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2020 யூன் 30 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டதுடன் தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 ஆகஸ்ட் 19 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, 2019 திசெம்பர் 03 ஆம் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பாராளுமன்ற பிரதம அரசாங்க கொறடாவின் அலுவலகத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் பாராளுமன்ற பிரதம அரசாங்க கொறடாவின் அலுவலகத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அலுவலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்த அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின்போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பாராளுமன்ற பிரதம அரசாங்க கொறடாவின் அலுவலகத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவு மற்றும் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிச் செயலாற்றல் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 திசெம்பர் 03 ஆம் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிச் செயலாற்றல் கூற்றில் வருமானமல்லாத பெறுவனவுகளின் கீழ் முற்பணப் பெறுவனவுகளாக காட்டப்பட வேண்டிய ரூபா 4,806,474 பெறுமதி உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | முற்பணப் பெறுவனவுகளாக காட்டப்பட வேண்டிய ரூபா 4,806,474 பெறுமதி நிதிச் செயலாற்றல் கூற்றில் வருமானமல்லாத பெறுவனவுகளின் கீழ் தனியாக உள்ளடக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. வருமானமல்லாத பெறுவனவுகளின் கீழ் இம் மொத்தத் தொகை குறிப்பிடப்பட்டிருந்தது. இது எதிர்காலத்தில் தனியாக குறிப்பிடப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டின் போது பெறப்பட்ட ரூபா 403,610 கூட்டுமொத்தமான ஏனைய பெறுவனவுகள் நிதிச் செயலாற்றல் கூற்றில் ஏனைய பெறுவனவுகளின் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | திறைசேரிக் கட்டுநிதிகள் தவிர நிறுவனத்தின் ஏனைய பெறுவனவுகள் நிதிச் செயலாற்றல் கூற்றில் ஏனைய பெறுவனவுகளின் கீழ் உள்ளடக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. வருமானமல்லாத பெறுவனவுகளின் கீழ் இம் மொத்தத் தொகை குறிப்பிடப்பட்டிருந்தது. இது எதிர்காலத்தில் தனியாக குறிப்பிடப்படும். |

### 1.6.2 நிதி நிலைமைக் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | ஆண்டிற்காக அலுவலகத்தால் உரித்தாக்கப்பட்ட மொத்த நிலையான சொத்துக்களின் ஆரம்ப மீதி, ஆண்டின் போதான கொள்வனவுகள் மற்றும் அகற்றல்கள் மற்றும் இறுதி மீதிகளின் கூட்டுமொத்தம் என்பன நிதிக்கூற்றுக்களுடன் சேர்த்து சமர்ப்பிக்கப்பட்ட ஏசீஏ-6 படிவத்தின் கீழ் குறிப்பிடப்பட்ட நிதியல்லாச் சொத்துக்கள் கூற்றில் குறியீட்டு இல. 611 இற்கெதிராக குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | ஆரம்ப மீதி, ஆண்டின் போதான கொள்வனவுகள் மற்றும் அகற்றல்கள் மற்றும் இறுதி மீதிகளின் கூட்டுமொத்தம் என்பன குறியீட்டு இல. 611 இற்கெதிராக குறிப்பிடப்பட வேண்டும். | நிதிக்கூற்று சீர்செய்யப்பட்டுள்ளது. திறைசேரிக் கூற்றுக்களில் சில வேறுபாடுகள் காணப்படுகின்றன. 2020 ஆம் ஆண்டில் உரிய சீராக்கங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | 2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களுடன் சேர்த்து சமர்ப்பிக்கப்பட்ட ஏசீஏ-6 படிவத்தில் கட்டப்பட்டுள்ள நிதியல்லாச் சொத்துக்கள் கூற்றின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஏனைய பொறி மற்றும் இயந்திரத்தின் பெறுமதி ரூபா 6,355,556 ஆக காணப்பட்ட அதே நேரம் 2019 சனவரி 01 இல் உள்ளவாறு காட்டப்பட்ட அதற்கு நேரொத்த பெறுமதி ரூபா 6,632,337 ஆக காணப்பட்டது. அதற்கிணங்க ரூபா 276,781 வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்ட பெறுமதிகள் 2019 சனவரி 01 இல் உள்ளவாறான பெறுமதிகளிற்கு சமமானதாக இருக்க வேண்டும். | நிதிக்கூற்று சீர்செய்யப்பட்டுள்ளது. திறைசேரிக் கூற்றுக்களில் சில வேறுபாடுகள் காணப்படுகின்றன. 2020 ஆம் ஆண்டில் உரிய சீராக்கங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | நிதிக்கூற்றுக்களில் குறியீட்டு இல. 61122 இல் ஏனைய பொறி மற்றும் இயந்திரத்தின் கீழ் காட்டப்பட வேண்டிய 05 சொத்து வகைகளின் ஆரம்ப மீதிகள் வகைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் குறியீட்டு இல. 61122 இன் கீழ் காட்டப்பட்ட ஆரம்ப மீதிக்கும் CIGAS நிகழ்ச்சித்திட்டத்தின் பிரகாரம் சொத்துக்கள் அறிக்கையில் குறிப்பிடப்பட்ட ஆரம்ப மீதிக்கும் இடையே ரூபா 257,443 வேறுபாடொன்று காணப்படுகின்றது. CIGAS நிகழ்ச்சித்திட்டத்தின் பிரகாரம் குறியீட்டு இல. 61122 இன் கீழும் அரச கணக்குகள் திணைக்களத்தின் சொத்துகள் பதிவேட்டிலும் பதிவுசெய்யப்பட்ட 05 சொத்து வகைகளின் ஆரம்ப மீதிகள் சமப்பட்டிருக்கவில்லை. | மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் ஏசீஏ-6 படிவத்தில் CIGAS நிகழ்ச்சித்திட்டத்தின் பிரகாரம் சொத்துக்கள் அறிக்கையில் குறிப்பிடப்பட்ட பெறுமதிகளும் அரச கணக்குகள் திணைக்களத்தின் சொத்துகள் பதிவேட்டில் குறியீட்டு இலக்கங்களில் குறிப்பிடப்பட்ட பெறுமதிகளும் சமப்பட வேண்டும். | நிதிக்கூற்று சீர்செய்யப்பட்டுள்ளது. திறைசேரிக் கூற்றுக்களில் சில வேறுபாடுகள் காணப்படுகின்றன. 2020 ஆம் ஆண்டில் உரிய சீராக்கங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஈ) | நிதிக்கூற்றுக்களின் ஏசீஏ-6 படிவத்தில் குறியீட்டு இல. 6112201 இன் கீழ் அலுவலக உபகரணத்தின் கொள்வனவு ரூபா 650,209 தொகையாக காணப்பட்ட போதிலும் CIGAS நிகழ்ச்சித்திட்டத்தின் பிரகாரம் சொத்துக்கள் அறிக்கையில் இது ருபா 4,350 ஆக காணப்பட்டது. மேலும் அரச கணக்குகள் திணைக்களத்தின் சொத்துக்கள் பதிவேடுகளின் பிரகாரம் அப் பெறுமதி ரூபா 1,868 தொகையாக காணப்பட்டது. தொலைத்தொடர்பு உபகரணத்தின் கொள்வனவாக ரூபா 38,920 தொகை அரச கணக்குகள் திணைக்களத்தின் சொத்துக்கள் பதிவேட்டில் குறியீட்டு இல. 6112204 இன் கீழ் மாத்திரம் பதிவுசெய்யப்பட்டிருந்தது. | மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் ஏசீஏ-6 படிவத்தில் CIGAS நிகழ்ச்சித்திட்டத்தின் பிரகாரம் சொத்துக்கள் அறிக்கையில் குறிப்பிடப்பட்ட பெறுமதிகளும் அரச கணக்குகள் திணைக்களத்தின் சொத்துகள் பதிவேட்டில் குறியீட்டு இலக்கங்களில் குறிப்பிடப்பட்ட பெறுமதிகளும் சமப்பட வேண்டும். | நிதிக்கூற்று சீர்செய்யப்பட்டுள்ளது. திறைசேரிக் கூற்றுக்களில் சில வேறுபாடுகள் காணப்படுகின்றன. 2020 ஆம் ஆண்டில் உரிய சீராக்கங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | நிதியல்லாச் சொத்துக்கள் கூற்று தொடர்பாக ஏசீஏ-6 படிவத்தில் CIGAS நிகழ்ச்சித்திட்டத்தின் பிரகாரம் சொத்துக்கள் அறிக்கையில் மீளாய்வாண்டின் போது அகற்றல்கள் எதுவும் அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை. எனினும் ஏனைய பொறி மற்றும் இயந்திரத்தின் கீழ் ரூபா 295,445 கூட்டுமொத்தமான அகற்றல்கள் அரச கணக்குகள் திணைக்களத்தின் சொத்துகள் பதிவேட்டில் அறிக்கையிடப்பட்டிருந்தன. | மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் ஏசீஏ-6 படிவத்தில் CIGAS நிகழ்ச்சித்திட்டத்தின் பிரகாரம் சொத்துக்கள் அறிக்கையும் அரச கணக்குகள் திணைக்களத்தின் சொத்துகள் பதிவேட்டின் பிரகாரம் அகற்றல் பெறுமதியும் சமப்பட வேண்டும். | நிதிக்கூற்று சீர்செய்யப்பட்டுள்ளது. திறைசேரிக் கூற்றுக்களில் சில வேறுபாடுகள் காணப்படுகின்றன. 2020 ஆம் ஆண்டில் உரிய சீராக்கங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஊ) | நிதிக்கூற்றுக்களில் குறியீட்டு இல. 61122 - ஏனைய பொறி மற்றும் இயந்திரத்தின் கீழ் குறிப்பிடப்பட வேண்டிய 05 சொத்து வகைகளின் இறுதி மீதிகள் வகைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் நிதிக்கூற்றுக்களில் குறியீட்டு இல. 61122 இன் கீழ் குறிப்பிடப்பட்ட இறுதி மீதி, CIGAS நிகழ்ச்சித்திட்டத்தின் பிரகாரம் சொத்துக்கள் அறிக்கையிலுள்ள இறுதி மீதி மற்றும் அரச கணக்குகள் திணைக்களத்தின் சொத்துக்கள் பதிவேட்டின் பிரகாரம் இறுதி மீதி என்பன முறையே ரூபா 6,889,780, ரூபா 6,894,130 மற்றும் ரூபா 6,377,681 ஆக பதிவு செய்யப்பட்டிருந்தன. அப் பெறுமதிகளிற்கு இடையேயான வேறுபாடுகளிற்கான காரணங்களை கணக்காய்வின் போது அறிந்துகொள்ள முடியாதிருந்தன. அதேபோல் CIGAS நிகழ்ச்சித்திட்டத்தின் பிரகாரம் குறியீட்டு இல. 61122 இன் கீழ் பதிவுசெய்யப்பட்ட 05 சொத்து வகைகளின் இறுதி மீதிகள் மற்றும் அரச கணக்குகள் திணைக்களத்தின் சொத்துகள் பதிவேடு என்பன சமப்பட்டிருக்கவில்லை. | மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் ஏசீஏ-6 படிவத்தில் CIGAS நிகழ்ச்சித்திட்டத்தின் பிரகாரம் சொத்துக்கள் அறிக்கையும் அரச கணக்குகள் திணைக்களத்தின் சொத்துகள் பதிவேட்டின் பிரகாரம் அகற்றல் பெறுமதியும் சமப்பட வேண்டும். | நிதிக்கூற்று சீர்செய்யப்பட்டுள்ளது. திறைசேரிக் கூற்றுக்களில் சில வேறுபாடுகள் காணப்படுகின்றன. 2020 ஆம் ஆண்டில் உரிய சீராக்கங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (எ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் 2019 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளிற்குரிய தேறிய சொத்துக்களின் கூட்டுமொத்தம் முறையே ரூபா 7,178,547 மற்றும் ரூபா 5,169,754 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன. | நிதி நிலைமைக் கூற்றின் கூட்டுமொத்தங்கள் சரியாக குறிப்பிடப்பட வேண்டும். | நிதி நிலைமைக் கூற்று சீர்செய்யப்பட்டுள்ளது. கூட்டுமொத்தங்கள் சீர்செய்யப்பட வேண்டும். |

**1.6.3 கட்டுநிதி மீதி**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 208 இன் பிரகாரம் செலவின விடய இல. 18-01-01-1003 இற்காக ஏனைய திணைக்களங்களால் ரூபா 47,480 செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் சீராக்கல் கணக்கொன்றின் மூலம் அத்தொகை குறிப்பிடப்படாமல் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிச் செயலாற்றல் கூற்றில் உதவி மானியங்கள் மற்றும் மாற்றல்களின் கீழ் கழிக்கப்பட்டு காட்டப்பட்டிருந்தது. இதன் விளைவாக மீண்டெழும் செலவினம், மொத்த செலவினம் மற்றும் கட்டுநிதி மீதி என்பன நிதிச் செயலாற்றல் கூற்றில் ரூபா 47,480 தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன. | நிதிப்பிரமாணம் 208 இன் பிரகாரம் ஏனைய திணைக்களங்களால் மேற்கொள்ளப்பட்ட செலவினங்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. சீராக்கல் கணக்கின் மூலம் அத் தொகையை குறிப்பிடுதல் விடுபட்டிருந்தது. எனினும் நிதிக்கூற்றுக்களில் கணக்குகள் சரியாக தயாரிக்கப்பட்டுள்ளன. |

**1.6.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| அவதானிப்புக்கள் | | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணங்காமைகள்** | | |
| **(அ) பொது நிர்வாக சுற்றறிக்கைகள்** | | | |
| (i) 2009 ஏப்ரல் 16 ஆம் திகதிய 09/2009 ஆம் இலக்க, 2009 யூன் 17 ஆம் திகதிய 09/2009(I) ஆம் இலக்க மற்றும் 2017 ஏப்ரல் 19 ஆம் திகதிய 03/2017 ஆம் இலக்க சுற்றறிக்கைகள் | அலுவலக உத்தியோகத்தர்களின் உள்வருகை மற்றும் வெளிச்செல்லலை பதிவு செய்வதற்காக கைவிரல் அடையாள இயந்திரம் எதுவும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் கைவிரல் அடையாள இயந்திரம் பயன்படுத்தப்பட வேண்டும். | வார இறுதி நாட்கள் மற்றும் விடுமுறை நாட்களின் போது அலுவலக நேரத்திற்கு மேலதிகமாக கடமைகளை ஆற்ற வேண்டியிருப்பதாலும் பாராளுமன்றத்தால் பயன்படுத்தப்பட்ட கைவிரல் அடையாள இயந்திரம் பாராளுமன்ற பதவியணியினருக்கு சொந்தமில்லாததன் காரணமாக பயன்படுத்த முடியதிருந்ததாலும் உரிய நேரத்தில் வரவுப் பதிவேட்டை மூடுவதன் மூலம் முறையாக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. அதற்கிணங்க சுற்றிக்கைகளை அமுல்ப்படுத்துவது சிக்கலானதாக காணப்படுகின்றது. |

| | | | |
|---|---|---|---|
| (ii) 2009 ஏப்ரல் 16 ஆம் திகதிய 09/2009 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 6 ஆம் பந்தி | சாதாரண கடமை மணித்தியாலங்களின் பின்னர் மேற்கொள்ளப்பட்ட கடமைகளிற்கான படிக் கொடுப்பனவுக்கான அடிப்படையொன்றாக நேரம் பயன்படுத்தப்படுவதால் நேரங்கள் கைவிரல் அடையாள இயந்திரங்களின் ஊடாக உறுதிப்படுத்தப்பட வேண்டும். எனினும் அவ்வாறு மேற்கொள்ளாமல் அலுவலகம் வரவுப் படி மற்றும் பயன்படுத்தப்படாத விடுமுறை என்பவற்றிற்காக ரூபா 2,554,512 தொகையான படிகளை செலுத்தியிருந்தது. | சுற்றறிக்கைகளிற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வரவுப் படி மற்றும் பயன்படுத்தப்படாத விடுமுறை என்பவற்றிற்கான கொடுப்பனவுகள் மேற்படி பந்தியிலுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டிருந்தது. |
| (ஆ) 2014 சனவரி 01 ஆம் திகதிய 1/2014 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கை | அலுவலக உத்தியோகத்தர்களின் பயிற்சி மற்றும் திறன்கள் அபிவிருத்தி தொடர்பான ரூபா 2,997,724 செலவினம் 2401 ஆம் இலக்க செலவின விடயத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் வெளிநாட்டுப் பிரயாண செலவினம் 1102 அம் இலக்க செலவின விடயத்தின் கீழ் தவறுதலாக கணக்கீடு செய்வதற்கு கொண்டு வரப்பட்டிருந்தது. | சரியான செலவின விடயத்தின் கீழ் தொகைகள் கணக்கீடு செய்யப்பட வேண்டும். | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களை பின்பற்றுவதற்கு உத்தியோகத்தர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். |

| | | | |
|---|---|---|---|
| **(இ) அரச நிதிச் சுற்றறிக்கை** | | | |
| 2016 பெப்ரவரி 16 ஆம் திகதிய 431(1) ஆம் இலக்க சுற்றறிக்கை | விமானச் சீட்டுக்களை கொள்வனவு செய்யும் போது பெறுகை வழிகாட்டல் ஏற்பாடுகளிற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் அவ் அறிவுறுத்தல்களுடன் இணங்காமல் அலுவலகம் விமானச் சீட்டுக்களை கொள்வனவு செய்வதற்காக ரூபா 262,500 தொகையை செலவிட்டிருந்தது. | சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளிற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் பெறுகை வழிகாட்டல்களிலுள்ள ஏற்பாடுகளிற்கிணங்க நடவடிக்கைகளை எடுப்பதற்கு உத்தியோகத்தர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை ஏற்படுத்துதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) 2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் குறிப்பு (iii), கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் ரூபா 269,777 தொகையான பொறுப்புக்கள் ஒவ்வொரு செலவினத் தலைப்பு தொடர்பாக பொதுத் திறைசேரியால் வழங்கப்பட்ட கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் குறிப்பிடப்பட்டிருக்காத போதிலும் இது 2020 ஆம் ஆண்டில் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் காட்டப்பட்ட பெறுமதி ஒவ்வொரு செலவினத் தலைப்பு தொடர்பாக பொதுத் திறைசேரியால் வழங்கப்பட்ட கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றுடன் இணங்க வேண்டியதுடன் சுற்றறிக்கைகளிற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இது எதிர்காலத்தில் சரியாக குறிப்பிடப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களுடன் சேர்த்து சமர்ப்பிக்கப்பட்ட குறிப்பு (iv) இல் ரூபா 118,587 தொகையான பொறுப்புக்கள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | பொறுப்புக்கள் சரியாக குறிப்பிடப்பட வேண்டும். | இது எதிர்காலத்தில் சரியாக குறிப்பிடப்படும். |

3. **மனித வள முகாமைத்துவம்**

-----------------------------------------------

மீளாய்வாண்டின் இறுதியளவில் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர் முறையே 44 மற்றும் 41 ஆக காணப்பட்டதுடன் அற்கிணங்க 03 வெற்றிடங்கள் காணப்படுகின்றன.